MyCARE

With me, every step of the way




வகை 2 நீரிழிவுநோயில், **நீங்கள் நோய்வாய்ப்பட்டால் தயாராக இருந்து** என்ன செய்ய வேண்டும் என்று **அறிந்திருக்க வேண்டியது அவசியம்.**

USV

**நீங்கள் நோய்வாய்ப்பட்டால்,**
நோயின் போது வெளியிடப்படும் மனஅழுத்த ஹார்மோன்கள் காரணமாக உங்கள் இரத்த சர்க்கரை அதிகமாகலாம்.




**நோயின் போது,** நீங்கள் குறைவாக சாப்பிடலாம் அல்லது குமட்டல், வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு இருக்கலாம், இது குறைந்த இரத்த சர்க்கரை அளவுக்கு காரணமாகலாம்.



# இதோ, நோய்வாய்ப்பட்டிருக்கும் நாட்களில் நினைவில் கொள்ள வேண்டிய சில முக்கிய குறிப்புகள்

இரத்த சர்க்கரை இலக்கு வரம்புக்குள் இருந்தாலும் **வழக்கமான உங்கள் நீரிழிவு மருந்துகளை எடுத்துக்கொள்ளவும்.**




இன்சுலின் சிகிச்சையை


**நிறுத்தக் கூடாது**




குறைந்தது ஒரு நாளுக்கு
இரண்டு தடவை அல்லது
தேவைப்பட்டால் அடிக்கடி
**உங்கள் இரத்த குளுக்கோஸ்**
**அளவை சோதித்துக் கொள்ளவும்.**



தாகம்/வாய் வறட்சி, அடிக்கடி சிறுநீர் கழித்தல் அல்லது எடை இழப்பு போன்ற **அறிகுறிகள் உள்ளதா என்று பார்க்கவும்,** இவை உயர் இரத்த சர்க்கரை அளவை சுட்டிக்காட்டலாம்.






**நீரேற்றத்துடன் இருக்கவும்,** நீரிழப்பை தடுக்க ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் **120 முதல் 180 மிலி தண்ணீர் குடிக்கவும்.**



**குறிப்பு:** இரத்த சர்க்கரை அதிகமாக இருந்தால், தண்ணீர் அல்லது சர்க்கரை இல்லாத பானங்களை குடிக்கவும், இரத்த சர்க்கரை குறைவாக இருந்தால், கார்போஹைட்ரேட் அடங்கிய பானங்களை குடிக்கவும்.

**நீங்கள் வழக்கமாக உணவு உட்கொள்வதை பராமரிக்கவும்,** அதிகமாக சாப்பிட முடியவில்லை என்றால், கார்போஹைட்ரேட் அடங்கிய மென்மையான உணவுகள் அல்லது திரவங்களை எடுத்துக் கொள்ளலாம்.



**காய்ச்சல் இருக்கிறதா என்று பார்க்கவும்,** இது நோய்த்தொற்றை குறிக்கலாம்.



# நீரிழிவு மாத்திரைகள் எடுத்துக் கொள்பவர்களுக்கு

**நீங்கள் மெட்ஃபார்மின் எடுத்துக் கொள்வதை தற்காலிகமாக நிறுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படலாம்,** குறிப்பாக உங்களுக்கு தீவிர நோய்தொற்று அல்லது நீரிழப்பு ஏற்பட்டிருந்தால்.



மெட்ஃபார்மின் திரும்ப எடுத்துக் கொள்ளும் வரை **மாற்று சிகிச்சையை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.**




குறிப்பு : உங்கள் இரத்த சர்க்கரை எவ்வளவு அதிகமாகிறது என்பதைப் பொறுத்து இன்சுலின் அல்லது மற்ற நீரிழிவு எதிர்ப்பு மருந்து பயன்பாடு இருக்கலாம். மருந்தை திருத்தியமைத்துக் கொள்வதற்கு உங்கள் மருத்துவருடன் தொடர்பு கொள்ளவும்.

# இன்சுலின் எடுத்துக் கொள்பவர்களுக்கு

**இன்சுலின் சிகிச்சையை நிறுத்த வேண்டாம்,** அதற்குபதிலாக பரிந்துரைக்கப்பட்ட அளவு அட்டவணையை கடைபிடிக்கவும்.




உங்கள் இரத்த சர்க்கரை அளவு தொடர்ந்து 180 mg/dL விட அதிகமாக இருந்தால், **நீங்கள் இன்சுலின் அளவை அதிகரிக்க வேண்டி இருக்கலாம்.**





குறிப்பு : இந்த நிகழ்வில் உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும் மற்றும் அவருடைய அறிவுரையை பின்பற்றவும்.

**இரத்த சர்க்கரை அளவு அதிகமாக (>270 mg/dL) இருந்தால்,**
ஒவ்வொரு நான்கு மணி நேரத்திற்கும் சோதித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.



இரத்த சர்க்கரை அளவு அதிகமாக (>20 mg/dL) இருந்தால் **கீட்டோன்களுக்கான பரிசோதனை அவசியமாகலாம்.**



குறிப்பு : சிறுநீர் கீட்டோன்கள் பாசிட்டிவ் ஆக இருந்தால் உதவிக்கு உடனடியாக உங்கள் மருத்துவருடன் தொடர்பு கொள்ளவும்.

# உங்கள் மருத்துவரை தொடர்பு கொள்ள அபாய அறிவிப்புகள்


எதையும் **சாப்பிடவோ** அல்லது குடிக்கவோ **முடியவில்லை**




**கடுமையான வாந்தி** அல்லது **வயிற்றுப்போக்கு** உள்ளது



இரத்த சர்க்கரை அளவு **24 மணி நேரத்திற்கு மேலாக அதிகமாக உள்ளது**



சிறுநீரில்
**கீட்டோன்கள் உள்ளன**



நோய்வாய்ப்பட்டிருக்கும்போது
**என்ன செய்வது என்று தெரியாவிட்டால்**



இந்த நோய்கள்
இரத்த சர்க்கரை
அளவுகள் மீது தாக்கத்தை
ஏற்படுத்துவதற்கான
வாய்ப்புகள் அதிகம்.


சாதரண ஜலதோஷம் அல்லது ஃப்ளூ, கோவிட்-19 உட்பட



தொண்டைப் புண்



சிறுநீர்க் குழாய் நோய்த்தொற்றுகள்



**சுவாசக் குழாய் அழற்சி** அல்லது **மார்பு நோய்த்தொற்றுகள், வயிறு கோளாறு** மற்றும் **வயிற்றுப்போக்கு**



சீழ்கட்டிகள் போன்ற **தோல் நோய்த்தொற்றுகள்** (குறிப்பாக காய்ச்சல் அல்லது அதிக வெப்பநிலையைத் தொடர்ந்து இந்த நிலைகள் இருந்தால்)



**ஸ்டீராய்டுகள் கொண்டு சிகிச்சை**



“மேலும் தகவல்களுக்கு, உங்கள் மருத்துவரை அல்லது **MyCARE டயாபெடிஸ் எஜுகேட்டரை** உடன் தொடர்பு கொள்ளவும்.”



# MyCARE

With me, every step of the way

## Reference


1. CDC. Managing Sick Days. (2022). from https://www.cdc.gov/Diabetes/managing/flu-sick-days.html

2. IDF. How to manage Diabetes during an illness? "SICK DAY RULES". Idf.org. Retrieved from https://www.idf.org/component/attachments/?task=download&id=2155:IDFE-Sick-day-management

3. ICMR. Guidelines for management of type 1 Diabetes. Main.icmr.nic.in. (2022). Retrieved from https://main.icmr.nic.in/sites/default/files/upload_documents/ICMR_Guidelines_for_Management_of_Type_1_Diabetes.pdf.

4. ISPAD – Sick day management in type 1 Diabetes. Retrieved from file:///C:/Users/natas/Downloads/Sick-day-management-type-%201-Diabetes.pdfCMR_Guidelines_for_Management_of_Type_1_Diabetes.pdf.

5. Sick-Day Rules for Managing Your Diabetes. Retrieved from https://www.theDiabetescouncil.com/sick-day-rules-for-managing-your-Diabetes/


Issued in Public Interest by USV

The guide/presentation/content/literature is for general information, guidance and educational purposes only and is not complete or exhaustive. The guide /presentation/content/literature is not intended or implied to replace or substitute any current practice and or advice/guidance/diet provided by healthcare professionals. This guide/presentation/content/literature does not constitute any treatment/therapy/medication/diet/opinions for any patients who are on diabetes medication, the patients are required to prior consult their healthcare professional before acting on any change on treatment/therapy/ medication/diet and/or opinions. USV Private Limited makes no representations as to accuracy, completeness, correctness, suitability or validity of any information contained in this guide/presentation/content/ literature and will not be liable for any losses, injuries or damages arising from its use.

USV